**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 185 of 2019**

Prosecution witness LW1 (PW1) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade–I B.C., on date 13.03.2025 in accordance with provisions with the Act of 1873.

| Name | : | திரு.ஆர்த்தி | Father Name | : | திரு.முருகேஷ் |
|---|---|---|---|---|---|
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**A1 to A3 Present.**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் பொம்மாண்டஹள்ளியில் குடியிருக்கிறேன் . என் கணவர் பெயர் முருகேஷ் அவர் Shree Sai Water Service என்ற பெயரில் கடை வைத்திருந்தார். எங்களுக்கு சாகித்தி , கல்கீதா என்ற இரண்டு பெண் பிள்ளைகள் உள்ளார்கள். 2018 வருடம் நாங்கள் பொம்மாண்டஹள்ளி சர்கில் அருகே உள்ள நாராயண சாமி என்பவர் வீட்டில் முதல் மாடியில் குடி இருந்தோம். 01.01.2018 ஆம் தேதி புது வருடம் அன்று ஹரிஸ் ரெட்டிக்கும் அவர் கூட இருக்கும் நபர்களுக்கும் சண்டை இருந்தது . ஹரிஸ் ரெட்டிக்கும் உடன் இருந்த மற்றொரு பூனப்பள்ளி ஹரிஸ் ரெட்டிக்கும் , மகேந்தர , கோபால் , சேகர், இன்னும் சில பேருக்கும் சண்டை நடந்தது . என்னுடைய கணவர் அன்றைய தினம் கேக் வெட்டுவதற்காக வெளியே போய்விட்டு திரும்பி வந்தபோது இதனை சொன்னார்.

(2) என் கணவரிடம் ஹரிஸ் ரெட்டி அவர் உடன் இருந்த நண்பர்கள் சேர்ந்து சண்டை போட்டுள்ளார்கள்.

ஊரில் இருந்த சில பேர்கள் என் வீட்டுகாரரை எங்கள் வீட்டிற்கு அனுப்பி வைத்துவிட்டார்கள். அன்றைய தினம் இரவு என் கணவர் என்னிடம் சண்டை ஆகிவிட்ட விவரத்தை என்னிடம் சொன்னார். அடிக்கடி ஹரிஸ் ரெட்டி என் கணவரை பார்த்து உன்னை வெட்டாமல் விட மாட்டேன் என்று சொல்லி வந்தார். எப்போதும் போவதுபோல் Water Service கடைக்கு காலை 8.30–9.00 மணிக்கு என் கணவர் போனார். 5.30 மணிக்கு என் கணவர் வீட்டிற்கு வந்தார். மீண்டும் 6.00–6.30 மணிக்கு எதுவும் என்னிடம் சொல்லாமல் அவர் வெளியே போனார். கடைக்கு சென்று வருவதாக என்னிடம் சொல்லிவிட்டு போனார். மறுபடியும் என் கணவர் 9.30 திரும்பி வைத்தார். பிரியாணி வாங்கி வருவதாக சொல்லி என்னிடம் ரூ .500 வாங்கிக்கொண்டு போனார். மறுபடியும் அவர் வரவில்லை.

காலை 7.00 மணிக்கு அருண் என்ற ஒரு பையன் வந்து அக்கா முருகேஷ் அண்ண டிரையின்யில் விழுந்து செத்துவிட்டதாக சொன்னான். நான் ஆணைக்கல் இருந்து ஓசூர் செல்லும் இரயில் பாதைக்கு சென்று பார்த்தேன். அவருக்கு நெற்றியிலும், கையிலும், வலது பக்க புஜத்திலும், கத்தியில் வெட்டிய காயம் காணப்பட்டது. கழுத்தின் பின் பகுதியிலும் கத்தியால் ஏற்பட்ட காயம் இருந்தது. நாங்கள் போய் என்ன Dress அணிந்து இருந்தார் என்று பார்பதற்குள் போலீசார் அழைத்து வந்துவிட்டார்கள். நாங்கள் வீட்டிற்கு வரும்போது செந்தில் முருகன் என்ற பெயர் கொண்ட வெல்டிங் ஷாப் அருகே இரத்தம் காணப்பட்டது. அங்கே தான் என் கணவரை வெட்டி அதனை மறைக்க வேண்டி இரயில்வே Track ல் என் கணவர் உடலை எடுத்துக்கொண்டு போட்டுள்ளார்கள்.

செந்தில் முருகன் பெயர் கொண்ட கடைக்கு எதிரில் தான் ஹரிஸ் ரெட்டியின் ஆபிஸ் உள்ளது . இது சம்மந்தமாக மத்திகிரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் . தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது நான் கொடுத்த புகார் தான் அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் **அ.த.சா.ஆ.1** ஆகும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். 01.01.2018 அன்று என் கணவருடன் சண்டை போட்ட கோபால் , சேகர் , மகேந்திரகுமார் தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியாது என்று சொன்னால் சரிதான் . 01.01.2018 அன்று கேக் வெட்ட போனபோது சண்டை நடந்ததாக நான் புகாரிலும் ,போலீஸ் வாக்குமூலத்திலும் சொல்லி உள்ளேன் என்று சொன்னால் சரிதான். எந்த இடத்தில் கேக் வெட்டப்பட்டது என்பதை நான் நேரில் பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான் . New Year கேக் வெட்டும்போது எந்த இடத்தில் வைத்து கேக் வெட்டினார்கள் என்ற விவரம் புகாரிலும் என் போலீஸ் வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். 01.01.2018 சண்டை நடந்தது சம்மந்தமாக நானோ , என் கணவரோ காவல் நிலையத்தில் புகார் ஏதும் கொடுக்கவில்லை . 01.01.2018 இரவு என் கணவரை சமாதானம் செய்து அந்த இடத்தில் இருந்து அனுப்பி வைத்த நபர்களின் பெயரை நான் புகாரிலும் , போலீசார் வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

சம்பவத்தை குறித்து நான் போலீசில் புகார் கொடுத்தாக சொல்லும் பட்சத்தில் அந்த புகாரை யார் கைப்பட எழுதிக்கொடுத்தார்கள் என்று சொன்னால் நான் தெலுங்கில் எழுதினேன் காவல் நிலையத்திலுள்ள சாரிடம் சொன்னேன் அவர் கைப்பட அந்த புகாரை எழுதினார் . போலீசார் தான் புகாரை எழுதினார்கள் என்று சொன்னால் சரிதான் . தெலுங்கில் எழுதிய புகாரில் ஹரிஸ் ரெட்டி , பூனப்பள்ளி ஹரிஸ் ரெட்டி பெயரையும் குறிப்பிட்டு தெலுங்கில் எழுதி கொடுத்தேன் . தற்போது உள்ள புகாரில் ஹரிஸ் ரெட்டி , பூனப்பள்ளி ஹரிஸ் ரெட்டி ஆகியோர் பெயர் இல்லை என்று சொன்னால் அவர்கள் பெயர் இல்லை என்று போலீசார் சொல்லுகிறார்கள் . நான் புகாரை 12.02.2018 தேதி காலை 10.00 மணிக்கு மத்தகிரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என் கணவர் Shree Sai Water Service செய்து வருவதாக சொல்லும் பட்சத்தில் புகாரில் அது எந்த இடத்தில் , யார் அந்த இடத்தின் உரிமையாளர் என்ற விவரம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான் . ஆனால் தெலுங்கில் கொடுத்த விவரத்தில் அந்த விவரத்தை சொல்லி இருக்கிறேன்.

Shree Sai Water Service ல் என் கணவருடன் ஒரே ஒரு நபர் மட்டும் பணிபுரிந்து வந்தார் . இந்த விவரத்தை நான் புகாரிலும் , போலீஸ் வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான் . என் கணவர் இரவு 9.30 க்கு யாருடன் போனார் , எந்த வண்டியில் போனார் என்ற விவரத்தை நான் புகாரிலும் , போலீசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான் . என் கணவரிடம் செல்போன் இருந்தது என்று சொன்னால் சரிதான். என் கணவர் பிரியாணி வாங்குவதற்கு சர்க்கில் அருகே

உள்ள கடைக்கு போவதாக சொன்னார் . எங்கள் வீட்டிற்கும் , பிரியாணி கடைக்கும் சுமார் 500 மீ தொலைவு இருக்கும். இந்த விவரங்களை போலீசார் கேட்கவில்லை அதனால் சொல்லவில்லை. 500 மீ என்பதால் 10 நிமிடத்தில் போய் வந்துவிடலாம் என்று சொன்னால் சரிதான் . அவ்வாறு என் கணவர் வீட்டுக்கு திரும்பாத பட்சத்தில் என் கணவருக்கு போன் போட்டு நான் கேட்டேனா என்று சொன்னால் என்னிடம் அந்த சமயத்தில் போன் இல்லை . அதன் பிறகு நான் போய் பிரியாணி கடை அருகே என் கணவர் இருக்கிறாரா என்று சென்று பார்ககவில்லை என்று சொன்னால் சரிதான் . என் கணவர் வராத போது உறவினர்களிடம் விசாரித்ததாக சொல்லும் பட்சத்தில் எந்த உறவினரிடம் விசாரித்தேன் என்று சொன்னால் எந்த உறிவினரிடமும் விசாரிக்கவில்லை.

எங்கள் திருமணம் காதல் திருமணம் என்றால் சரிதான் . எங்கள் வீட்டில் ஒத்துக்கொள்ளாததால் ஒரு வருடம் ஆணைக்கல்லில் இருந்தோம் என்றால் சரிதான். ஆணைக்கல்லில் என் கணவருக்கு நிறைய நண்பர்கள் இருந்தார்கள் என்று சொன்னால் அது தவறு. போலீசார் என்னை 12.02.2018 ம் தேதி , காலை 9.00 நான் இரயில்வே Track போனபோது போலீசார் அங்கு இருந்தார்கள் அப்போதும் விசாரணை செய்தார்கள் . என்னை போலீசார் காவல் நிலையத்தில் வைத்து தான் விசாரித்தார்கள் . காவல் நிலையத்தில் வைத்து தான் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான் . நான் எழுதி இருந்தது எல்லம் சார் ஒரு முறை தமிழில் எழுதினார்கள் படித்து காண்பித்தார்கள் அதில் ஹரிஸ் ரெட்டி பெயர் இருந்தது அதில் தான் நான் கையெழுத்து போட்டேன்.

நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் குடி இருந்த வீட்டிற்கு நான்கு வீடு தள்ளி தான் TVS Company– க்கு செல்லும் மையின் ரோடு உள்ளது என்றால் சரிதான் . TVS Company ல் 1000 த்திற்கு மேற்பட்டோர் வேலை செய்கிறார்கள் என்றால் சரிதான். அந்த மையின் ரோட்டில் 24 மணிநேரமும் மக்கள் போய் வந்துக்கொண்டிருப்பார்கள் என்று சொன்னால் அவ்வாறு இருக்கலாம் . அந்த மையின் ரோட்டில் நிறைய கடைகள் உள்ளது என்று சொன்னால் சரிதான் . ஆனால் அன்றைய தினம் ஞாயிற்றுக் கிழமை . செந்தில் முருகன் என்ற பெயர் கொண்ட வெல்டிங் ஷாப்பில் தான் CCTV Camera உள்ளது. நான் குடியிருந்த வீட்டின் பக்கத்தில் யார் வீடுகள் உள்ளது என்று சொன்னால் கோபால் ரெட்டி என்பவர் மட்டும் எனக்கு தெரியும் . ஆனால் மற்ற வீடுகள் இருக்கிறது. அந்த வீட்டின் அருகாமையில் Apartments உள்ளது என்றும் அதில் நிறைய பேர் குடியுள்ளார்கள் என்றால் சரிதான். நான் சொல்லும் அந்த காலி இடம் அந்த Apartments ல் இருந்து பார்த்தால் தெரியும் என்றால் சரிதான். அந்த Apartments –க்கும் செந்தில் முருகன் கடைக்கும் நடுவே சுமார் 20 அடி தொலைவு தான் இருக்கும் என்றால் சரிதான்.

அவ்வாறு சம்வம் நடந்திருந்தால் அந்த வீட்டில் இருப்பவர்களுக்கு கேட்கும் என்றால் சரிதான். ஆனால் அந்த காலி இடத்தில் வண்டி எல்லாம் நிறுத்தி வைத்திருப்பார்கள். அந்த இடத்தில் மின் கம்பங்கள் உள்ளது என்று சொன்னால் அந்த சமயத்தில் இல்லை . நான் சொல்லுவது போல் அங்கு சம்பவம் நடந்திருந்தால் பக்கத்தில் உள்ளவர்களுக்கு அது கேட்டிருக்கும் என்றும் அவர்கள் வந்து பார்த்திருப்பார்கள் என்று சொன்னால் சத்தம்

இல்லாமல் கொலை செய்யப்பட்டு இருக்கலாம் . Sound வந்ததால் தான் கேட்கும். மையின் ரோடு என்பதால் காலி இடம் நன்றாக தெரியும் என்று சொன்னால் அவ்வாறு தெரியாது. ஹரிஸ் ரெட்டி, பூனப்பள்ளி ஹரிஸ் ரெட்டி ஆகியோரை கைது செய்யவில்லை என்று காவல் துறையில் மனு கொடுத்தேன் என்றால் சரிதான். மத்திகிரி காவல் நிலையத்தில் மட்டும் தான் புகார் கொடுத்தேன். வேறு எங்கும் கொடுக்கவில்லை. என் கணவர் இறந்து சுமார் 9 மாதம் கழித்து இரண்டு ஹரிஸ் பேரையும் வழக்கில் சேர்க்கவில்லை என்று நான் மனு கொடுத்தேன் . 06.08.2018 அன்று IG அவர்களுக்கு , ஹரிஸ் ரெட்டி, பூனப்பள்ளி ஹரிஸ் ரெட்டி , சதீஷ் ரெட்டி, முரளி ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்காமல் எதிரிகள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும் மேற்சொன்ன நபர்கள் தான் உண்மையான குற்றவாளிகள் என்று புகார் கொடுத்தேன் என்று சொன்னால் சரிதான்.

அதேபோல் ஓசூர் நீதிமன்றத்திலும் மேற்சொன்ன நபர்கள் தான் உண்மையாக சம்பவத்தில் ஈடுப்பட்ட நபர்கள் என்றும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி உயர் நீதிமன்றத்தில் மனு போட்டுள்ளதாக நான் ஓசூர் நீதிமன்றத்தில் மனு போட்டேன் என்று சொன்னால் சரிதான் . அதேபோல் நான் உயர் நீதிமன்றத்திலும் ஹரிஸ் ரெட்டி , பூனப்பள்ளி ஹரிஸ் ரெட்டி, முரளி , சதிஷ் ரெட்டி ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி மனு செய்தேன் என்றால் சரிதான் . 01.01.2018 அன்று கேக் வெட்டும் சம்பவமே நடக்கவில்லை என்றும் சண்டை ஏதும் நடக்கவில்லை என்றும் உண்மையிலே நடந்திருந்தால் அது சம்மந்தமாக புகார் அப்போதே கொடுக்கப்பட்டிருக்கும் என்றால் அது சரியல்ல. அதேபோல் நான் புகார்

கொடுக்கும்போது ஹரிஸ் ரெட்டி, பூனப்பள்ளி ஹரிஸ் ரெட்டி, முரளி , சதீஷ் ரெட்டி ஆகியோர் மீது புகார் கொடுத்தேன் என்றும் அவர்கள் மீது வழக்கு பதிவு செய்யாமல் எதிரிகள் மீது பொய்யாக வழக்கு போடப்பட்டுள்ளது என்று சொன்னால் இந்த எதிரிகளும் இந்த வழக்கு சம்பவத்தில் ஈடுப்பட்டுள்ளார்கள். எதிரிகளுக்கும் என் கணவர் கொலைக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் நான் சொன்ன அனைவரும் கொலையில் சம்மந்தப்பட்டவர்கள் தான் . நான் சொல்லுவதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. என் கணவர் இறப்பிற்கும் எதிரிகளுக்கு எந்த சம்மந்தமும் இல்லை என்றால் அது தவறு.

Additional District Judge

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN